# **In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 81/2024** **Date:17.04.2026.**

**(PW1)-** கிருஷ்ணம்மாள்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு உடன் பிறந்த சகோதரர் மற்றும் சகோதரி உண்டு என்றால் சரிதான், எனது சகோதரர் பெயர் விஜயன். நான் மற்றும் எனது சகோதரர் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடும் போது உடன் இருந்தோம் என்றால் சரியல்ல, நான் மட்டும் தான் இருந்தேன். வழக்கு பட்டிகை சொத்தான கதவு எண் 3/75 வீட்டில் எனது சகோதரி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், அவர் வீடு கட்டுவதால் குடியிருந்து வருகிறார். மணகரைக்கும் தாவா சொத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கீலோ மீட்டர் இருக்கும். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் 2022 வருடம் 7 வது மாதம் இறந்தார். நான் எனது வழக்கில் வேலாயுதம் பிள்ளை என்பவரிடம் இருந்து சொத்தை கிரயம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் மாறாக எனது நிரூபண வாக்குமூலத்தில் நாராயணப்பிள்ளை என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் யாரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் வேலாயுதம் பிள்ளையிடம் இருந்து கிரயம் பெற்றேன். எனது ஆவணங்களில் நீலகண்டபிள்ளை அனந்ரவன் வேலாயுதம் பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனக்கு வேலாயுதம் பிள்ளையிடம் இருந்து கிரயம் பெற்ற ஆவணத்தை தவிர்த்து வேறு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றுள்ள சொத்தின் எல்கை பழனியப்பன்பிள்ளை மனைக்கும் மேற்கு, தாணுபிள்ளை மனைக்கு வடக்கு, ரோட்டிற்கு கிழக்கும் தெற்குமாக உள்ள 7 செண்ட் நிலத்தை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்து P.W.D க்கு உரிமைப்பட்ட சொத்துக்களை எல்கையாக கொண்டதில்லை என்றால் சரிதான். நான் சொத்தை கிரயம் பெறும் போது தற்போது மேற்கு பக்கம் அமைத்துள்ள சிமெண்ட் ரோடு கிடையாது என்றால் சரிதான், ஓடையாக இருந்தது. மேற்கு பக்கம் உள்ள ரோட்டின் இரண்டு பக்கமும் உள்ள சொத்தின் உரிமையாளர்கள் விட்டுகொடுத்த இடத்தில் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி ரோட்டிற்கு எனது சொத்திலும் சிறிது இடம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள முடுக்கு நான் கிரயம் பெறும் சமயத்தில் கிடையாது என்றால் சரிதான். எனது சொத்திற்கு கிழக்கு பக்க எல்கை சர்வே எண் 11A ல்

உள்ளது என்றாலும் ஆணையர் மேற்படி முடுக்கையும் சேர்த்து 6.446 ஆக காட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கை படி நான் கிரயம் பெற்ற இடத்தில் 554 சதுர லிங்ஸ் சொத்து மட்டுமே குறைவாக உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு கிரயம் கொடுத்த வேலாயுதம் பிள்ளைக்கு 1961 பாகப்படி கிடைத்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான்.

4. மேற்படி ஆவணப்படி வேலாயுதம் பிள்ளைக்கு தாவா சர்வே எண் 3070/7 சொத்தில் 10.500 செண்ட் ஏ பட்டிகை 4,5 இனச் சொத்துக்களாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணப்படி சி பட்டிகை சொத்து கிருஷ்ணம் பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. எனது கிரய ஆவணத்தில் வேலாயுதம் பிள்ளை மேற்படி பாகப்பிரிவினை படி அவருக்கு 10.500 செண்ட் கிடைத்தாலும் கிடப்பு படி அவருக்கு 7 செண்ட் இருப்பதாக கூறிதான் எனக்கு வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரயம் கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது. நான் தாவா சொத்தை அளந்து பார்த்து கிரயம் பெறவில்லை என்றால் நான் உடன் இல்லை எனது அப்பாதான் அதை பார்த்துக்கொண்டார், அளந்து பார்த்த விபரமும் எனக்கு தெரியாது. நான் தாவா சொத்தை அளவீடு செய்து எல்கை நிர்ணயம் செய்ய எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எல்கைகளும் நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள எல்கைகள் வெவ்வேறு என்றால் அது பற்றி தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 28.04.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**